அனுப்புநர்
திரு. ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர்/மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர்,
ஜவஹர்லால் நேரு உள்வட்ட சாலை,
கே. கே. நகர்,
சென்னை – 600 078.

பெறுநர்
அரசுச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

<u>ந.க.எண். 3079/மா.தி.ந. 3.1/2012, நாள். 7.5.2012.</u>

அம்மையீர்,

**பொருள்:** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், சென்னை–78 – பள்ளி ஆசிரியர்கள் பணி மாறுதல் – மாற்றுத் திறனாளி பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசு ஆணை(1–டி) எண். 131, பள்ளிக் கல்வி(இ–1)த் துறை, நாள். 28.4.2010.
2. அனைத்து அரசுப் பணி மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கம் கடிதம், நாள். 10.4.2012.

************

பார்வை 2ல் காணும் கடிதத்தின் வாயிலாக அனைத்து அரசுப் பணி மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கம் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர், பார்வை 1ல் காணும் அரசாணையின் வாயிலாக, மாற்றுத் திறனாளி பள்ளி ஆசிரியர்கள் பணி இட மாறுதலுக்கான பொதுக் கலந்தாய்வின் போது முற்றிலும் கண் பார்வையற்றவர்கள் மற்றும் மூன்று சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், இதனால் மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி, மாற்றுத் திறனாளிகள் என சான்று பெற்றவர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்து அரசிற்கு பரிந்துரைக்க கோரியுள்ளனர்.

மேற்காணும் அரசாணை கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி, 40% ஊனம் மற்றும் அதற்கு மேல் பெற்றிருந்தாலே மாற்றுத் திறனாளிகள் என வகைப்படுத்தப்பட்டு மாற்றுத் திறனாளிகள் சான்று வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு 40% மற்றும் அதற்கு மேல் ஊனம் இருந்தாலே அன்றாட வேலைகள் மேற்கொள்ளுவதில் சாதாரண நபர்களை விட சிரமங்கள் உள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணையில் பத்தி 5ல் (iii)ல் மாற்றுத் திறனாளிகள் எனவும், பத்தி 6ல் ஆ பிரிவில் (iii)ல் மாற்றுத் திறனாளிகள் எனவும் மாறுதல் செய்து அரசாணைக்கு திருத்தம் வெளியிடலாம் எனக் கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே, மாற்றுத் திறனாளி பள்ளி ஆசிரியர்கள் நலன் கருதி மேற்காணும் சலுகையினை அளித்து அரசாணை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

10.5.12

முதன்மைச் செயலர்/
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்.

<u>நகல் :</u>

மாநிலத் தலைவர்,
அனைத்து அரசுப் பணி மாற்றுத் திறனாளிகள் நல சங்கம்,
எண்.21ஏ, ஏரிக்கரை சாலை,
கோட்டூர்,
சென்னை – 85.